

# தி.மு.க.
# இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–3 க்கு உட்பட்ட காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 03-02-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி





# தி.மு.க.
# இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 01-02-2025




நாட்டிற்கே எடுத்துக்காட்டாக

# கல்வித் துறைக்கு ரூ.44 ஆயிரம் கோடி ஒதுக்கிய முதல்வர்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!



கரூர், பிப்.6-

நாட்டிற்கே எடுத்துக் காட்டாக கல்வித்துறைக்கு 44 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கி திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள் என கரூர் மாநகராட்சி பள்ளி நூற்றாண்டு திருவிழாவில் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆசிகளுடன், கரூர் மாவட்ட பள்ளிக் கல்வித்துறையின் சார்பாக, நூறாண்டுகள் கண்ட கரூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் நூற்றாண்டு திருவிழா நடைபெற்றது. நூற்றாண்டு விழா, நூற்றாண்டு நினைவுத்தூண் பணிகள் தொடக்க விழா ஆசிரியர் பெருமக்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தலைமை வகித்து பேசினார். எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர். இளங்கோ, க.சிவகாம சுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், தொழிலதிபர்கள் விஎன்சி பாஸ்கர், அட்லஸ் நாச்சிமுத்து, மாநகராட்சி ஆணையர் சுதா, மாமன்ற உறுப்பினர் வசுமதி பிரபு முன்னிலை வகித்தனர். ஜி.சிவராமன் தொகுப்புரை வழங்கினார். பள்ளி தலைமை ஆசிரியர் ரேவதி நன்றியுரை கூறினார்.

நூற்றாண்டு நினைவுத் தூண் கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டியும், முன்னாள் இந்நாள் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கியும் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார்.

அமைச்சர் பேசியதாவது:

கரூர் நகரின், கரூர் மக்களின் இதயம் தான் கரூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி. நான் படித்த பள்ளி. கரூர் மாவட்ட கல்வி புரட்சியின் கல்வெட்டு. நூறு ஆண்டுக்கு மேல் ஒரு பள்ளி உயர்ந்து நிற்கிறது என்றால், இதற்கு பின்னால் எத்தனை ஆயிரம் ஆசிரியப் பெருமக்களின் உழைப்பும், முயற்சியும் தியாகமும் இருக்கும்.

என் வாழ்நாளில் வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியாக கருதுகிறேன். மூன்று தலைமுறைகள் அமர்ந்திருக்கிறோம். அரசு அதிகாரிகளாக, நீதிபதிகளாக, வழக்கறிஞர்கள், தொழில் முனைவோர்கள் மருத்துவர்கள் ஆக ஆயிரக்கணக்கான ஆளுமைகளை உருவாக்கிய இந்த பள்ளியில் நானும் காலடி வைத்து கல்வியை பயின்றேன் என நினைக்கிற பொழுது இந்த பகுதியில் நான் செல்கின்ற பொழுது திரும்பி பார்க்காமல் செல்ல முடியாது. நாம் ஒரு உயர்ந்த நிலையை எட்டும் போது அதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவது ஆசிரியர்கள் தான். படிக்கும்போது ஆசிரியர்கள் கண்டிப்புடன் இருந்ததை இப்பொழுது நினைத்து பார்க்கிறோம்.. உலகத்தில் பொறாமைப்படாத ஒரு இனம் இருக்கிறது என்று சொன்னால் அது ஆசிரியர் இனம் தான் . உயர்ந்த நிலைக்குச் செல்லும் போது இவன் எனது மாணவன் அன்று பெருமைப்படக்கூடிய ஒருவர் ஆசிரியர் தான் வேறு யாரும் அது போல் இருக்க மாட்டார்கள். அவர்கள் வீட்டில் உள்ள குழந்தைகளைவிட மாணவ செல்வங்களிடம். தான் அதிகமான நேரத்தை செலவிடுவார்கள் ஆசிரியர்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளி கல்வித்துறைக்கு பல்வேறு வரலாற்று சிறப்பு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 44 ஆயிரம் கோடி என வரலாற்றில் இல்லாத அளவுக்கு நிதியை ஒதுக்கி உள்ளார்கள். தமிழ்நாட்டில் உள்ள மாணவ செல்வங்கள் அனைவரும் முதலமைச்சர் அவர்கள் வரும்பொழுது அப்பா என்று அன்போடு அழைத்து நன்றியை காட்டுகிறார்கள். நான் முதல்வன் காலை உணவு திட்டம் போன்றவை உலகத்திற்கு எடுத்துக் காட்டாக இருக்கும் வகையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் உயர் கல்வியில் தமிழ்நாடு தான் முதலிடம் என்கிற வரலாற்றுச் சாதனையை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். விளையாட்டு துறையை மேம்படுத்த வேண்டும் என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை விளையாட்டு தலைநகரமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நான்கு தொகுதிகளை கொண்ட சிறிய மாவட்டமாக இருந்தபோதிலும் கரூர் மாவட்டத்திற்கு வேளாண்மை கல்லூரி முதல் ஆண்டிலேயே கொடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. புதிய பேருந்து நிலையத்துக்கு 40 கோடி ரூபாய் நிதிகளை கொடுத்து பணிகளை தொடங்கி வைத்துள்ளார்கள். இடையில் சிலர் நீதிமன்றத்திற்கு சென்றதால் வழக்கு நிலுவையில் உள்ளது. விரைவில் நல்ல தீர்ப்பு வரும். பல ஆண்டுகளாக கோரிக்கையாக இருந்த கரூர் காமராஜ் மார்க்கெட் வணிக வளாகம் புதுப்பி க் கப்பட்டு ஓரிரு மாதங்களில் முழுமையாக நிறைவு செய்து பயன்பாட்டிற்கு வர இருக்கிறது.

போட்டி தேர்வுக்கு தயார்படுத்திக் கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களுக்கு ஒரு சிறந்த நூலகம் வேண்டும் என்பதற்காக திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் பிரம்மாண்டமாக ஒரு நூலகம் அமைக்க பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதையும் ஒரு சிலர் பொறுத்துக் கொள்ள முடியாமல் நீதி மன்றத்திற்கு சென்றார்கள். அதிலும் நல்ல தீர்வு உருவாகும். கரூரில் ஐடி பார்க் தேர்வு செய்யும் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன. 200 ஏக்கர் பரப்பளவில் புதிய சிப்காட் அமைப்பதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டு அடுத்த கட்ட நிலையிலே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறன. இப்படி ஒவ்வொன்றாக நான்கு தொகுதிகளுக்கும் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சிறப்பு திட்டங்களை தந்து இருக்கிறார்கள். இன்னும் நிறைய வளர்ச்சி பணிகளை கொண்டு சேர்த்திட வேண்டுமென்றால் அரசும் மக்களும் இணைந்து சிறப்பாக கரம் கோர்த்து எடுத்துச் செல்வோம். தேவைகளை முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்து சென்று பெற்று தருகிறோம். சிலர் யோசித்து பார்ப்பார்கள். முதலில் குடும்பத்தை பார்ப்போம். பிறகு மற்ற பணிகளை பார்ப்போம் என்று. ஆனால் எனக்கு எல்லாமே கரூர் மாவட்டம் இங்குள்ள மக்களும் தான். என்னுடைய வாழ்நாளில் ஐந்து முறை வெற்றி பெற செய்த மக்களுக்காக அவர்களுடைய நினைவில் இருக்கக்கூடிய வகையில், பணிக்களத்தில் மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு அக்கறை கொள்ள வேண்டும் என்று முனைப்போடு பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் முழு ஊக்கத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் என்ன தேவை இருக்கிறதோ அதை மாவட்ட மக்களுக்கு குடும்பத்தில் ஒருவனாக இருந்து முழுமையாக நிறைவேற்றி தருவேன் என்கின்ற உறுதியை தெரிவித்துக் நூற்றாண்டு விழாகண்ட மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு ஆடிட்டோரியம் கட்டப்படும் என்கிற உறுதியை தெரிவித்துக் கொள்கிறேன். நூற்றாண்டு விழாவில் கூடினோம் பேசினோம் கலைந்தோம் என்று இல்லாமல் தொடர்ந்து சந்திப்போம் செயல்படுவோம். இவ்வாறு அமைச்சர் பேசினார். பன்னீர்செல்வம், விசாசண்முகம் விசா குணசேகரன் அப்னா தனபதி, கரூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, கறம்பக்குடி தெற்கு ஒன்றியம் மழையூர் மற்றும் புதுப்பட்டியில் நடைபெற்ற பாகமுகவர் (BLA 2) மற்றும் பாக பணிக்குழு உறுப்பினர்கள் (BLC) கூட்டம் ஒன்றிய செயலாளர் தவ.பாஞ்சாலன் தலைமையில் நடைபெற்றது. தொகுதி பார்வையாளர் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநிலச் செயலாளர் வண்ணை அரங்கநாதன் ஆலோசனைகள் வழங்கினார். நிகழ்வில் முன்னாள் இளைஞரணி அமைப்பாளர் எம்.எம்.பாலு, முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் மழையூர் ராமசாமி, ஒன்றிய நிர்வாகிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி யு.ஜி.சி.யின் புதிய வரைவு நெறிமுறைகளை திரும்பப் பெற வலியுறுத்தி கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மாணவரணி அமைப்பாளர் முனைவர்.சீனிவாசன் அப்பாதுரை தலைமையில் மாணவர்கள், தனியார் கல்லூரி முன்பு கல்லூரி மாணவர்களிடம் எடுத்துரைத்து வரைவு நெறிமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து யு.ஜி.சி.க்கு மின்னஞ்சல் அனுப்பும் நிகழ்வு நடைபெற்றது. இதில் தி.மு.க.வின் மாநில மாணவரணி துணைச் செயலாளர் தமிழரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜோலார்பேட்டை நா. மணி
**பிப்ரவரி 6 (2013)**



வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பேரூர் செயலாளர் மற்றும் நகரச் செயலாளராக 31 ஆண்டுகள் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டார்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.